# <u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி</u>

**அசல் வழக்கு எண். 119/2018**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | .. **சாவித்ரி** | மதம் | .. **இந்து** |
| தந்தை / கணவர் பெயர் | .. **பழனிசாமி** | தொழில் | .. - |
| வயது | .. 67 | நாள் | .. 02.04.2025 |
| கிராமம் | .. **இடங்கணசாலை** | | |
| வட்டம் | .. **சங்ககிரி** | | |

2025 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15-ஆம் நாள் செவ்வாய்கிழமை என்பவரின் சாட்சிய வாக்குமூலம் 1969-ஆம் ஆண்டின் 44-வது ஏற்பாட்டின்படி திருமதி R.இளமதி, மாவட்ட உரிமையியல் நீதிபதி, சங்ககிரி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

<u>வாதிகள் தரப்பு சாட்சியின் முதல் விசாரணை</u>

நான் இவ்வழக்கில் வாதி ஆவேன். நான் இவ்வழக்கில் வாதி தரப்பு 1-ஆம் சாட்சி ஆவேன். எனது தரப்பு சாட்சியத்தை நிரூபண பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். சாட்சிய நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள விபரங்கள் அனைத்தும் எனக்கு நன்கு தெரியும். அந்த விபரங்கள் என்னால் சொல்லப்பட்டவைதான். எனது சாட்சியத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

1) 14.02.1992 தேதியிட்ட வாதி பெயரிலான விற்கிரைய ஆவணம் அசல் **வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2) 20.09.1995 தேதியிட்ட தனிநிலை துணை மாவட்ட ஆட்சியர் அவர்கள் சேலம் - தர்மபுரி அளித்த அறிவிப்பு அசல் **வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3) 30.07.2018 தேதியிட்ட தலைமையிடத்து துணை வட்டாட்சியர், சங்ககிரி அவர்களால் வழங்கப்பட்ட பட்டா எண். 3134 சர்வே எண். 631/4A சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4) 30.05.2015 தேதியிட்ட தலைமையிடத்து துணை வட்டாட்சியர், சங்ககிரி அவர்களால் வழங்கப்பட்ட அறிவிப்பு அசல் **வா.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5) 04.07.2018 தேதியிட்ட 01.01.1987- 12.02.2018 வரையிலான மகுடஞ்சாவடி சார்பதிவாளர் அவர்களால் வழங்கப்பட்ட வில்லங்க சான்றிட்ட அசல் **வா.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6) 04.07.2018 தேதியிட்ட மகுடஞ்சாவடி சார்பதிவாளர் அவர்களால் வழங்கப்பட்ட வில்லங்கம் இல்லை சான்று அசல் **வா.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

7) 16.06.2018 தேதியிட்ட மகுடஞ்சாவடி காவல் நிலையத்தில் அளிக்கப்பட்ட புகார் மனு கை நகல் **வா.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

8) 28.07.2018 தேதியிட்ட மகுடஞ்சாவடி காவல் நிலையத்தாரால் வழங்கப்பட்ட எனது புகாரின் மீதான CSR இரசீது அசல் **வா.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க வா.சா.1-ன் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

ஒப்பம்/சாவித்ரி

ஒப்பம்/திருமதி.R.இளமதி,
மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
சங்ககிரி.